பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 617 **நாள்: 26.10.2026**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, வட்டார துணை ஆணையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மணலி மண்டலத்தில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்தில் மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப,. அவர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று (26.10.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், மணலி மண்டலம், வார்டு-18க்குட்பட்ட மணலி, 200 அடி சாலையில் உள்ள அவசரகால கட்டுப்பாட்டு அறை, மாத்தூர், எம்.எம்.டி.ஏ 57ஆவது தெருவில் உள்ள பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையம் மற்றும் சமையல் கூடம், வார்டு-21க்குட்பட்ட மணலி, பாடசாலையில் உள்ள பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையம் மற்றும் சமையல் கூடம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நிவாரண மையங்களில் பொது மக்கள் தங்க வைப்பதற்கான அத்தியாவசிய வசதிகள் மேற்கொள்ளவும், சமையல் கூடத்தில் உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் தூய்மையாகப் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-வார்டு-70க்குட்பட்ட பெரம்பூர் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி, வார்டு-71க்குட்பட்ட பகுதியில் உள்ள சாலைகளில் தேங்கிய மழைநீர் மோட்டார் மூலமாக கண்ணிகாபுரம் கால்வாயில் வெளியேற்றும் பணி, கண்ணிகாபுரம் இரயில்வே கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணி, வார்டு-77க்குட்பட்ட யானைக்கவுணி சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி மற்றும் வார்டு-70க்குட்பட்ட பட்டேல் சாலையில் நடைபெற்று வரும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திடவும், தெருக்கள் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீரை மோட்டார் மற்றும் நீர் உறிஞ்சும் வாகனம் மூலம் அகற்றிடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மண்டல அலுவலர்கள், செயற் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.